1967 ஜூலை 6]

Thiru K. VINAYAKAM : Sir, may I know whether a deputation of these pensioners waited upon the Hon. Chief Minister in this connection and a memorandum was presented to him. Also, what is the reaction of the Hon. Chief Minister to such kind of memorandum?

The Hon. Thiru C. N. ANNADURAI : The deputation came but they did not wait. I gave them an immediate interview. They explained their point of view. I gave a very sympathetic hearing and I said that I would look into all the difficulties that they had explained.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, sometime back during the administration of schools by the district boards, a kind of financial aid called 'gratuity' was being paid to the retired teachers, but after the advent of the panchayat union councils, that practice seems to have been given up. Will the Government reconsider that?

The Hon. Thiru C. N. ANNADURAI : I do not think that the hon. Member's query arises as a consequence of that.

திண்டிவனத்தில் தீயணைப்பு நிலையம்

** 183 வினா.—திரு. க. இராமமூர்த்தி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

திண்டிவனத்தில் நடப்பு ஆண்டில் தீயணைப்பு படை அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : ஆம்.

Thiru K. VINAYAKAM : Sir, may I know what is the probable investment that will have to be made in this regard?

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, I do not have the figures but I think it would be the usual figure.

Thiru K. VINAYAKAM : Sir, may I know how soon will this be started especially as these are days of frequent fire accidents?

The Hon. Thiru C. N. ANNADURAI : The importance of Fire Services is being realised by this Government and they gree that it should be expedited.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த தீ அணைக்கும் மோட்டார்கள் ரொம்பக் குறைந்த சக்தியுடைய மோட்டார்களாக இருக்கிற காரணத்தினால்தான் அவை சீக்கிரத்தில் தீ பிடிக்கக் கூடிய இடங்களில் அதிகப்படியான அளவிற்கு அதை அணைக்க முடியாத நிலையில் சக்தியற்ற நிலையில் இருப்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, அதிக சக்தி படைத்த மோட்டார்களுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அங்கத்தினர் சொன்னது எனக்குத் தெரியாது. அங்கத்தினருக்குத் தெரிந்திருக்கலாம். அதிகப்படியான அளவிற்கு வேகமுள்ள மோட்டார்களை அதில் பயன்படுத்துவதால் தீ அணைப்பு வேலைகளில் நல்ல பலனைக் கொடுக்கும் என்று நிபுணர்கள் கூறுவார்களானால் அது கவனிக்கப்படும்.

வைகைக் கால்வாய்

முற்பகல் 9-30 *184 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வைகைக் கால்வாயை நவீனமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தத் திட்ட வேலைக்கு, மத்திய நீர் மின்சாரக் குழுவின் தொழில் நுட்ப ஒப்புதலும் திட்டக் குழுவிலிடமிருந்து நிர்வாக ஒப்புதலும் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், வைகைக் கால்வாய்த் திட்டம் பெரிய, பழைய திட்டம். சென்ற அமைச்சரவை இருக்கும்போது கூட இது மூன்றாவது திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது கூட பிளானிங் கமிஷன் அப்ரூவ் செய்து விட்டார்கள். ஹை பவர் கமிஷன் என்று ஒன்று இருக்கிறது, அது அப்ரூவ் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு உபயோகமான ஒரு திட்டம். கிழக்கு இராமநாதபுரத்தையே செழிப்பு அடையச் செய்ய நல்ல திட்டம் இது. இது நான்காவது திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மத்திய நீர்-மின்சாரக் குழுவினுடைய 24-4-1967-ம் தேதியிட்ட கடிதத்தில் ஆலோசனைக் குழு இதை ஒப்புக் கொண்டுவிட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கடிதத்திலே மேலும் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தலைமைப் பொறியாளர் அந்த விவரங்களை அளித்திருக்கிறார். வெகு விரைவில் அதற்கான பதில் வந்து சேருமென்றும், விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். கே. வடிவேலு : தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதியைச் சேர்ந்த நாகை நல்லூர் வாய்க்கால் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேள்வி, வைகைக் கால்வாய் திட்டத்தைப் பற்றியது. உறுப்பினர் கேட்பதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லப்படும்.